## தலைப்பு 226 – குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம் என்பதனால்,

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதாதபோதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டு தொடர்பாக உணரப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டினது நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமானப் பெறுவனவுகள்**

திணைக்களத்திற்குரிய வருமான பெறுவனவுகளை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஏனைய வருமானத் தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானம் திணைக்களத்தின் திரண்ட பரீட்சைமீதியின் பிரகாரம் ரூபா 50,283,070 ஆன போதிலும் வருமானக் கூற்று மற்றும் இணக்கக் கூற்றில் அப்பெறுமதி ரூபா 50,287,875 ஆக ரூபா 4,805 இனால் அதிகரித்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | கட்டுநிதி இணக்கக் கூற்றினதும் வருமானக் கூற்றினதும் ஏனைய வருமான தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானமாக ரூபா 50,287,875 குறிப்பிடப்பட்டுள்ளது. | வருமானங்கள் சரியாக கணக்கு வைக்கப்படல். |
| (ii) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய (2004-1-00) வருமானம் ரூபா 31,965,517 ஆன போதிலும் திரண்ட பரீட்சை மீதியின் பிரகாரம் அம்மீதி ரூபா 31,960,711 ஆக காணப்பட்டமையால் வேறுபாடு ரூபா 4,806 ஆகும். | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியில் விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்புத் தொகை (2004.01.00) குறிப்பிடப்பட்டுள்ளது ரூபா 31,965,517 என ஆகும். | வருமானங்கள் சரியாக கணக்கு வைக்கப்படல். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வருமானப் பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் வருமானம் மற்றும் திறைசேரியின் மாதாந்த வருமான அறிக்கைகளின் பிரகாரமான வருமானம் ஆகியவற்றுக்கிடையே 7 மாதங்களில் ரூபா 13,691 கூட்டுத்தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வருமானங்களை கணக்கு வைக்கும் போது தாமதத்தின் அடிப்படையில் வேறுபாடு உருவாகியுள்ள போதும் வேறுபாட்டினை இனங்கண்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானங்கள் சரியாக கணக்கு வைக்கப்படல். |
| (iv) | குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் விசா அனுமதிப்பத்திரம், வெளிநாட்டு பயணச் சீட்டு மற்றும் இரட்டைப் பிராஜாவுரிமையை பெற்றுக் கொள்வதற்கான கட்டண வருமானமாகிய வரி அல்லாத வருமானங்களில் (2003.02.07) சனவரி மாதத்தில் மீள செலுத்தப்பட்ட ரூபா 287,500 ஆன தொகை ஏனைய பெறுவனவுகள் மீள செலுத்தல்கள் (2003.99.00) ஆக பதிவு செய்தல் காரணமாக மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் வரி அல்லாத வருமானங்கள் அந்த அளவினால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தன. | சரியான வருமானத் தலைப்புக்களில் மீள் செலுத்தல்கள் இடம்பெறவில்லை. | வருமானங்களை சரியாக செலுத்தும் போது சரியாக கணக்கு வைத்தல். |

### 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கின் இணக்கக் கூற்றின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் பெற வேண்டிய மீதி ரூபா 154,640,598 ஆன போதிலும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்த மீதி ரூபா 154,170,771 | 2018 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே முன்கொண்டு வரப்படும் இவ்வேறுபாட்டினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | சரியான தகவல்களை கணக்குகள் மூலம் முன்வைத்தல். |

| | | |
|---|---|---|
| ஆனமையால் ரூபா 469,827 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிலும் இவ்வேறுபாடு தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையிடப்பட்ட போதிலும் இதுவரையிலும் திருத்துவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**1.6.3 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்களின் பெறுமதி ரூபா 404,759,071 ஆன போதிலும் 2021 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக அம்மீதி ரூபா 405,030,372 ஆக ரூபா 271,301 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிந்தது. | கடந்த வருடத்தில் கணனி பதிவேட்டில் தவறுதலாக உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 271,301 பெறுமதியான நுகர்வுப் பண்டங்கள், கணினி பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியாக கணக்கு வைத்தல் மற்றும் வெளிப்படுத்தல். |
| (ஆ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கணக்குகளில் காணப்பட்ட ரூபா 47,305,154 பெறுமதியான புத்துருவாகும் வேலைகள் (கட்டிடம்) மீதி 2021 ஆரம்ப மீதியாக நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA6) உள்ளடக்கப்படாது 2021 ஆம் ஆண்டின் கட்டிட கொள்வனவுகள் நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணனி நிகழ்ச்சித் திட்டத்திற்கு தரவுகளை உட்செலுத்தும் போது புத்துருவாகும் வேலைகளின் ஆரம்ப மீதிக்கு சீராக்க முடியாத காரணத்தினால் கொள்வனவுகள் நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியாக கணக்கு வைத்தல். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கட்டுநிதிக் கணக்கின் பிரகாரம் செலவினங்களின் ஊடாக கட்டுநிதியை தீர்க்கும் பெறுமதியானது ரூபா 2,113,835,822 ஆன போதிலும் திறைசேரியின் கணனி அச்சீட்டின் பிரகாரம் (SA 21) பெறுமதி ரூபா 2,490,631,457 ஆனமையால் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 376,795,635 இனால் குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான காசுப் புத்தகத்தின் மீதி ரூபா 376,795,635 ஆகும். அம்மீதி 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கு வைத்தல். |

### 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதிப்பிரமாணம் 85(2)(ஆ) பிரகாரம் பின்னர் மதிப்பீடு மாற்றியமைப்பதற்கு அவசியமானதாக காணப்படும் போது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அதற்குரிய காரணங்களுடன் அது தொடர்பில் பொருளாதார அலுவல்கள் மற்றும் அரச நிதிக் கொள்கைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது வருமான மதிப்பீடு திருத்தப்பட்டுள்ள போதிலும் அவ்வாறு மாற்றியமைப்பதற்கு உரிய காரணங்களடனான அறிக்கை அரச நிதிக் கொள்கைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் மதிப்பீடுகளை மாற்றியமைத்தல் 2022 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் மாத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது. | மதிப்பீடுகளை திருத்தியமைத்தல் தொடர்பில் சரியாக அறிக்கையிடல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 20 ஆந் திகதிய அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் தமது மும்மாத வருமான அறிக்கை அக்காலப்பகுதி நிறைவடைந்த திகதியிலிருந்து 15 நாட்களுள் அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் நிறுவனப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமையால் அறிக்கைகள் அனுப்புவதில் தாமதமொன்று ஏற்பட்டுள்ளது. | வருமானம் சரியான தரப்பினருக்கு அறிக்கையிடப் படுதல். |

## 2.3 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டுக்காக திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட 05 மீண்டெழும் செலவினங்கள் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டின் 30 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகம் மூடப்பட்டு இருந்தமை மற்றும் செலவினக் கட்டுப்பாடு தொடர்பில் திறைசேரியினால் வழங்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட பணிகள் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. | தேவைப்பாடுகளை இனங்கண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமானது மான மதிப்பீடுகளை தயாரித்தல். |
| (ஆ) | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது கடந்த வருடங்களின் செலவினங்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டிராமையால் ஏனைய செலவினங்களுக்காக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் செலவினங்கள் முறையே | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகம் மூடப்பட்டு இருந்தமை மற்றும் செலவினக் கட்டுப்பாடு தொடர்பில் திறைசேரியினால் வழங்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட பணிகள் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. | தேவைப்பாடுகளை இனங்கண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமானது மான மதிப்பீடுகளை தயாரித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 124.78 மில்லியன் மற்றும் ரூபா 93.57 மில்லியன் ஆன போதிலும் 2021 ஆம் ஆண்டின் போதும் ரூபா 223.8 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்நிதியேற்பாட்டில் ரூபா 7.9 மில்லியன் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்ட பின்னரும் ரூபா 120.33 மில்லியன் அல்லது 56 சதவீதம் எஞ்சியிருந்தது. | | |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் 72 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கொவிட் தொற்றுநோய் காரணமாக சேவை வழங்குவது வரையறுக்கப்பட்டமை, அரச நிறுவனங்கள் மூடப்பட்டு இருந்தமை மற்றும் உத்தியோகத்தர்களை சேவைக்கு வரவழைப்பது மட்டுப்படுத்தப்பட்டமையால் எதிர்பார்த்தவாறு செலவினங்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. | தேவைப்பாடுகளை இனங்கண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமானது மான மதிப்பீடுகளை தயாரித்தல். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் 4 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டின் 74 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலும் 2021 திசெம்பர் மாதத்தில் செலவிடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கொவிட் தொற்றுநோய் நிலைமையில் உரிய காலப்பகுதிகளில் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவு செய்ய முடியாதிருந்ததுடன் அப்பணிகள் 2021 திசெம்பர் மாதமளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. | தேவைப்பாடுகளை இனங்கண்டு சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமானது மான மதிப்பீடுகளை தயாரித்தல். |

## 2.4 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படாத ரூபா 19,034,888 கூட்டுத்தொகையான | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் அளவில் கொடுப்பனவுகளுக்காக | பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக உள்ளடக்கப்படல். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்கள் 2022 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் மூலம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ள காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் இச்செலவினம் பொறுப்புக்களாக பதிவு செய்யப்படவில்லை. | |
| (ஆ) | 06 செலவின விடயங்களின் சேமிப்பினை விஞ்சி ரூபா 10,403,168 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்துவதற்கு நேர்ந்த விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றின் காரணமாக நிச்சயமாக மேற்கொள்ளப்பட வேண்டியதாக காணப்பட்ட பணிகளுக்காக பொறுப்புக்களை ஏற்படுத்த நேர்ந்திருந்தது. | நிதியேற்பாடுகளை விஞ்சி செலவினங்களை மேற்கொள்ளல் / பொறுப்புக்களை ஏற்படுத்தல் மேற்கொள்ளப் படக் கூடாது. |
| (இ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 225/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி மற்றும் 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/02 இன் 4.5 ஆம் பந்தியின் பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் சிகாஸ் வலைத்தளத்தில் பதிவேற்றப்பட வேண்டியதுடன் அவ்வாறு அறிக்கையிடப்படாத எதுவித கடப்பாடுகள் அல்லது பொறுப்பொன்று 2022 ஆம் ஆண்டினுள் தீர்ப்பனவு செய்யப்படக் கூடாது என்பதும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பில் இவ்வாறு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டினுள் இந்நிலைமையினை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டின் போது 3 செலவின விடயங்களின் பொறுப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் | நிதிக்கூற்றிற்கு பொறுப்புக்களை உள்ளடக்கியதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் | பொறுப்புக்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல். |

| | |
|---|---|
| நிதிக்கூற்றுக்களின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 428,860 ஆன வேறுபாடொன்று நிலவியது. | திணைக்களத்தின் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் அப்பொறுப்புக்கள் திணைக்களத்தின் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் அப்பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிராமை இவ்வேறுபாட்டிற்கான காரணமாகும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

| | அவதானிப்புகள் | | | |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| | **ரூபா** | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 115(3)(அ) மற்றும் (ஆ) ஆம் பந்தி | - | கடந்த வருடத்தின் நவம்பர் 30 ஆந் திகதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் செலவின வாக்குப்பண நிதி இல்லாதிருந்தமை அல்லது திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு சொந்தமான கவனயீனம் அல்லது முனைப்பற்ற தன்மை காரணமாக செலுத்தப்பட்டிராது விடின் இந்த ஆண்டில் செலுத்துவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட குறித்த கொடுப்பனவுகள் தொடர்பான | இந்நிலைமையை தவிர்ப்பதற்கு உள்ளக ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. | செலவின கட்டுப்பாட்டினை முறைமைப் படுத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கடிதங்களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. | | |

(ஆ) சுற்றறிக்கைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | 2017 யூன் 28 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் 07 ஆம் பந்தி | 211,232,929 | திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட கைதவிர்க்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடுகளின் தகவல்கள் குறித்த காலாண்டு நிறைவில் கொம்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் ரூபா 54,806,599 இயந்திரம் மற்றும் உபகரணங்கள் ரூபா 34,938,734 கணினி மென்பொருட்கள் ரூபா 121,150,375 மற்றும் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கைதவிர்ப்பு ரூபா 337,221 இற்குரிய தகவல்களும் கொம்ரோலர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் செயற்படுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவித்தல்களின் பிரகாரம் செயற்படல். |
| (ii) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 2021/03 இன் 7.7 ஆம் பந்தி | 45,190 | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிக்கு சமனான பெறுமதியொன்று நிதி நிலைமை தொடர்பான கூற்றில் தேறிய சொத்துக்கள் / மூலதனத்தின் கீழான ஒதுக்கங்களாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆதனங்கள், பொறிகள் | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்க பெறுமதி ரூபா 15,190 குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவித்தல்களின் பிரகாரம் செயற்படல். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் ஒதுக்கத்தின் பெறுமதி ஆகியவற்றுக்கிடையே வேறுபாடொன்று நிலவியது. | | |

**2.6 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பணங்களை வழங்கும் போது உரிய பணிகள் உரிய முறையில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாத காரணத்தால் 2021 ஆம் ஆண்டின் போது 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு மீள காசாக தீர்க்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | முற்பணங்களை வழங்கும் போது திட்டவட்டமாக இனங்காணப்பட்ட பணிகளுக்காக மாத்திரம் முற்பணங்களை வழங்குவதற்கு இயலுமானதாக உள்ளக நடைமுறை திருத்தப்பட்டுள்ளது. | முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல் ஆகியவற்றுக்குரிய பணிகள் முறைமைப் படுத்தப்படல். |
| (ஆ) | 2020 நவம்பர் 30 மற்றும் 2021 நவம்பர் 26 ஆந் திகதிய கட்டுப்பாட்டு நாயகத்தின் உள்ளக சுற்றறிக்கைகளுக்கு இணங்காத வகையில் 2020 ஆம் ஆண்டின் போது எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 200,000 ஆன வைப்பில் ஒரு வருடம் நிறைவடையும் போது தீர்க்கப்பட்டிருந்தது ரூபா 90,933 மாத்திரம் ஆகும். எஞ்சிய ரூபா 109,067 ஆன எரிபொருள் பட்டியல்கள் 2021 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்படிக் கம்பனிக்கு செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் பெறுமதிகளும் | 2020 ஆம் ஆண்டின் எரிபொருள்களை பெற்றுக் கொள்வதற்காக அந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 200,000 ஆன தொகையும் ஆண்டின் இறுதியிலும் நிதியேற்பாடு எஞ்சியிராமையால் தீர்ப்பதற்கு இயலுமானதாக காணப்பட்டது ரூபா 90,933 மாத்திரம் ஆகும். எஞ்சிய ரூபா 109,067 ஆன தொகை 2021 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டுள்ளது. | முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல் ஆகியவற்றுக்குரிய பணிகள் முறைமைப் படுத்தப்படல். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 635,298 ஆகும். | | |
| (இ) | 01 முதல் 09 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் பணி வறிதாக்கப்பட்ட 05 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 714,342 கூட்டுத்தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன்தொகையை செலுத்துமாறு கடிதங்களின் மூலம் அறிவித்துள்ளதுடன் ஓய்வூதிய பணிக்கொடை அல்லது பிணையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதிகளை செயற்திறனாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 2.7 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம் அரச நிறுவனங்களினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்காக இலத்திரனியல் நடைமுறை மூலம் அரசிற்கு கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் போது கொடுக்கல் வாங்கலை ஒப்பிடல் மற்றும் தீர்ப்பனவு உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் 2013 ஆம் ஆண்டின் போது UNBIAB இலக்கத்தின் ஊடாக கிடைத்த ஐக்கிய அமெரிக்க டொலர் 700 தொகை 8 வருட காலமாக அகற்றப்படாத பெறுவனவாக 71963786 இலக்கமுடைய வங்கிக் | டொலரின் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது எஞ்சிய தொகையை பெற்றுக் கொள்வதற்கு முற்பணத் தொகை தொடர்ச்சியாக உபகட்டுநிதியாக பேணிச் செல்லப்படுகின்றது. | வங்கி கொடுக்கல் வாங்கல்களை சரியானதாகவும் முறையான தாகவும் பேணிச் செல்லல். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கில் காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையிலும் இது தொடர்பில் அறிக்கையிடப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டிலும் இப்பெறுமதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 188(2) பிரகாரம் வங்கி கூற்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வைப்பு சரியான முறையில் செலவு வைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சான்றுப்படுத்தப்பட வேண்டியதுடன் குறிப்பிட்ட காலத்தினுள் வைப்புக்கள் செலவு வைக்கப்பட்டுள்ளதாக வங்கியினால் குறிப்பிடப்பட்டிராத போது அது தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டும். எவ்வாறான போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக விடுவிக்கப்படாத ரூபா 678,464 தொகையான வைப்புக்களிடையே 3 மாதங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் ரூபா 493,219 நிலவியது. | வைப்புக்களை பரிசோதித்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ரூபா 191,484 ஆன மீதியை எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கி கொடுக்கல் வாங்கல்களை சரியானதாகவும் முறையான தாகவும் பேணிச் செல்லல். |
| (இ) | 7041443 இலக்க கணக்கில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 990,454 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் 3 முதல் 6 மாதங்கள் வரையிலான இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 766,475 ஆகும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 377,101 ஆகும். வங்கியின் ஊடாக போதிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வங்கி கொடுக்கல் வாங்கல்களை சரியானதாகவும் முறையான தாகவும் பேணிச் செல்லல். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் வழிகாட்டி இலக்கம் 12(ஆ) பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் இரு தடவைகள் திருத்தப்பட்டிருந்ததுடன் முதலாவது மற்றும் இரண்டாவது தடவை திருத்தப்பட்டிருந்தது தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிக்கமைய இணங்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்படல். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் செயல்முன்னேற்றத்தை பரீட்சிக்கும் போது திட்டமிட்டவாறு பணிகளை நிறைவேற்றியிராத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் திட்டமிடப்பட்ட பணிகளின் நிதிச் செயன்முன்னேற்றம், பௌதீக செயன்முன்னேற்றமாக பதிவு செய்யப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | திட்டங்கள் மற்றும் செயன் முன்னேற்றம் தொடர்பில் சரியாக பதிவுகளை பேணுதல். |

**3.2 ஏனைய அவதானிப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டினுள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தினால் 286,012 விமான பயணச் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் பல்வேறு குறைபாடுகள் காரணமாக 2861 பயணச் சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியான தரவுகளை உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான தனியான விமான பயணச் சீட்டுக்களை வழங்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மத்திய கிழக்கு நாடுகளுக்காக வழங்கப்பட்ட வெற்று பயண அனுமதிப்பத்திரங்கள் 4000 இன் இருப்பொன்று களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதி முதல் 2022 யூன் 02 ஆந் திகதி வரையிலும் வழங்குவதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாத 4 வகையான பயணச் சீட்டு வகைகள் களஞ்சியத்தில் காணப்பட்டன. | - மேற்படி - | இருப்புக் கட்டுப்பாடு முறைமைப் படுத்தப்படல். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இரட்டைப் பிரஜாவுரிமை பரிந்துரை செய்தல் தொடர்பிலான போது படிகளை செலுத்தும் போது 237/03 ஆம் இலக்க, 156/07 ஆம் இலக்க மற்றும் 29/11 ஆம் இலக்கம் ஆகிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் பணத்தை பெற்றுக் கொண்ட உத்தியோகத்தரினாலேயே குறித்த கொடுப்பனவுகள் பரிந்துரைக்கப்பட்டன. | - மேற்படி - | செலவினங்கள் உரிய முறையில் முகாமை செய்யப்படுதல். |
| (ஈ) | இரட்டை குடியுரிமை வழங்கும் குழு அங்கத்தவர்களுக்கு செலுத்தப்படும் படிகளின் 50 சதவீதம் பதவியணியின் 03 மட்டத்தின் கீழ் செலுத்துவதற்காக கட்டுப்பாட்டு நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அதற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | - மேற்படி - | உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு இணங்க செயற்படல். |

### 3.3 பெறுகைகள்

-----------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் மத்தள விமான நிலையத்தின் UPS கட்டமைப்பிற்காக 160 பட்டரிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 0.56 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செயல்முன்னேற்றத்தின் | 2021 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மேம்படுத்துவதற்காக ரூபா 2 மில்லியனான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் பட்டரிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 558,335 செலவிடப்பட்டிருந்தது. | திட்டங்கள் மற்றும் செயல் முன்னேற்றம் தொடர்பில் சரியான பதிவுகளை பேணிச் செல்லல். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் செலவினமாக தொகை ரூபா 2 மில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்தது. செலவின பேரேட்டின் பிரகாரம் இச்செலவினத்தை சான்றுப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | இரத்மலானை விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு வளாகத்தில் புனரமைப்பிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடான ரூபா 1.4 மில்லியன் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 70 சதவீதமாக காணப்பட்டது. | இரத்மலானை விமான நிலைய அலுவலக வளாகத்தின் புனரமைப்பிற்கான பௌதீக செயல்முன்னேற்றம் 70 சதவீதமாக காணப்பட்டதுடன் அப்பணிக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. செலவின தலைப்பினுள் நிதியேற்பாட்டை மாற்றி செலவினங்களை மேற்கொண்ட காரணத்தால் நிதியேற்பாடு நிறைவடைந்துள்ளது. | செலவின முகாமைத்து வத்தை முறைமைப் படுத்தல். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் 2 பெறுகை பணிகளுக்குரியதாக ஒதுக்கப்பட்ட பெறுமதியினை விஞ்சி ரூபா 37.7 மில்லியனான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன். | பெறுகைகள் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த பணிகளின் சந்தைப் பெறுமதி மாற்றமடைதல் மற்றும் திணைக்களத்தின் தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு மென்பொருட்களை மேம்படுத்தலின் கீழ் திட்டமிடப்பட்ட பணிகளுக்காக அந்த ஒதுக்கப்பட்ட செலவினத் தலைப்பினுள் மாற்றப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செலவின நிர்வாகம் முறைமைப் படுத்தப்படல். |

## 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 7.4 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அந்த விலைக்கு முழுமையாக காப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த CAE-9358 | சட்டமா அதிபரின் அறிவுரைக்கமைய அரச நிறுவனங்கள் இரண்டிற்கிடையே என்பதால் வழக்கின்றி தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை | சொத்துக்களின் நிர்வாகம் முறைமைப் படுத்தப்படல். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கமுடைய மோட்டார் வாகனம் 2016 ஒக்தோபர் 15 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்த துடன் இது பழுதுபார்க்கப்பட்டு பழைய நிலைமைக்கு உள்ளாக்குவதற்கு முடியாது என்பதும் மீண்டும பயன்படுத்த முடியாத நிலைமையில் உள்ளதாகவும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் 2019 மார்ச் 08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய முகவர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருந்த கடிதத்தின் பிரகாரம் முழுமையான நட்டமொன்றாக தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் குறித்த பரிந்துரையின் பிரகாரம் இந்த வாகனத்திற்காக முழுமையான அழிவு நட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | எடுக்க வேண்டியதால் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மேற்படி விபத்தின் பின்னர் 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக உரிய நடவடிக்கை எடுக்காது அலுவலக வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டு 2021 ஏப்ரல் மாதம் பழுதுபார்த்தல்களுக்காக தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. நீண்ட காலமாக வாகனம் பயன்படுத்தப்படாது அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் அதன் பாதுகாப்பு மற்றும் நிலவுகை தொடர்பில் நிறுவனத்தின் கவனம் செலுத்தப்பட்டிராமை தொடர்பில் கணக்காய்வில் மேலும் அவதானிக்கப்பட்டது. | விபத்து தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு கருத்திற் கொள்ளக் கூடியதான காலம் எடுக்கின்றமையால் பழுதுபார்த்தல் தாமதமைந்துள்ளது. | - மேற்படி - |
| (இ) | முகவர் நிறுவனத்தின் இந்த வாகனத்தை தரித்து வைத்தல் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 10,000 தொகை அந்நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | காப்புறுதி பணத்தை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் உரிய இணக்கப்பாட்டிற்கு வரமுடியாதிருந்தமையால் வாகனம் குறித்த தனியார் நிறுவனத்தில் நிறுத்தி வைக்க நேர்ந்துள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கணனி கட்டமைப்பு மற்றும் மென்பொருள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தரவுக் கட்டுப்பாட்டு முறைமை, வீசா தயாரித்தல், விமான கடவுச்சீட்டு கட்டமைப்பு, குடியுரிமை வழங்குதல் கட்டமைப்பு ஆகிய கட்டமைப்புக்களுக்காக 12 தனியார் நிறுவனங்களுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த நீண்டகால உடன்படிக்கைகள் கால அடிப்படையில் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை காலம் நிறைவடைந்து சில மாதங்களின் பின்னரும் இத்தனியார் நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் திணைக்களம் திருப்தி கொண்டுள்ளதாக கட்டுப்பாட்டு (தகவல் தொழில்நுட்பம்) இனால் வழங்கப்படும் சான்றிதழின் பிரகாரம் உடன்படிக்கை நாளதுவரையாக்கப்படுவதுடன் திணைக்களத்தின் செயற்திறன் மற்றும் ஆக்கபூர்வதான தன்மையை அதிகரிப்பதற்குரிய மதிப்பீடுகள் மற்றும் திருத்தங்கள் இவ் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு தாமதமாகி புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கைக்காக நிலுவை மாதங்களின் சேவைக் கட்டணமும் சேர்க்கப்பட்டு ஒரே தடவையில் பணம் செலுத்துதல் இடம்பெற்றுள்ளது. | திணைக்களத்தின் கணனி கட்டமைப்புக்கள் (மென்பொருள் மற்றும் தொடர்புடைய தரவுகள் மற்றும் தரவுக் கட்டமைப்பு, வீசா தயாரித்தல், விமானக் கடவுச்சீட்டு கட்டமைப்பு, குடியுரிமை வழங்குதல் கட்டமைப்பு) பேணும் சேவை உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திடும் தகவல் தொழில்நுட்ப பிரிவின் மற்றும் சட்டப்பிரிவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இச்சேவை உடன்படிக்கைகள் கால அடிப்படையில் நாளதுவரைக்கும் தேவைப்பாடு மேற்படி பிரிவுகளினால் முன்மொழியப்பட்டிராமையால் அவ்வாறு உடன்படிக்கைகள் நாளதுவரையாக்கப்பட வில்லை. மேலும் சேவை வழங்குனரினால் வழங்கப்படும் சேவை திணைக்களத்தின் செயற்திறன் மற்றும் ஆக்கபூர்வமான தன்மையை போதியளவில் திருப்தி கொள்கின்றமையால் கட்டுப்பாடு (தகவல் தொழில்நுட்பம்) இனால் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக கருத்தில் கொண்டு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கைகள் நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| (உ) பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகைகளுக்காக உடன்படிக்கை காலம் நிறைவடைந்திருந்த போதிலும் 2022 மே மாதம் இறுதி வரையிலும் உடன்படிக்கைகளை நாளதுவரையாக்கப்பட்டிராத 3 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இந்த நிறுவனம் 03 இன் பராமரிப்பு சேவை உடன்படிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு தகவல் தொழில்நுட்ப பிரிவினால் சமர்ப்பிக்கப்படவில்லை. | சொத்துக்களின் கட்டுப்பாடு முறைமைப் படுத்தப்படல். |

**4. நல்லாளுகை**

**4.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) துணைக் கட்டுப்பாட்டு கட்டமைப்பு, வீசா தயாரித்தல், விமான கடவுச்சீட்டு கட்டமைப்பு மற்றும் குடியுரிமை வழங்கும் ஆகிய கட்டமைப்புக்களை கொள்வனவு செய்தல் மற்றும் சேவை வழங்குவதற்காக 7 தனியார் நிறுவனங்களுடன் திணைக்களத்தினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த துடன் 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அந்நிறுவனங்களுக்கு முறையே ரூபா 145.7 மில்லியன் மற்றும் ரூபா 142 மில்லியன் பராமரிப்பு சேவைகளுக்கு செலுத்தப்பட்ட போதிலும் அவ்கட்டமைப்பு அவ்வவ்போது செயலிழந்தமை மற்றும் கட்டமைப்பு செயற்பாடற்றுக் காணப்படுவதுடன் அதன் மூலம் திணைக்களத்தின் பிரதான பணிகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே வீசாக் காலத்தினை விஞ்சிய காரணத்தினால் | குறைபாடுகளை இனங்கண்டு அதனை தீர்ப்பதற்கு புதிய கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தல் மற்றும் அதனை கட்டியெழுப்புதல் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அக்கட்டமைப்பு தற்போது பரிசோதனை மட்டத்தில் காணப்படுவதுடன் 2022 மே மாதத்தின் இறுதி முதல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. | கட்டமைப்பை மிகவும் ஆக்கபூர்வதாக பேணிச் செல்லல். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டரீதியற்ற முறையில் நாட்டினுள் தங்கியிருப்பவர்களின் மொத்த எண்ணிக்கையை இனங்காணுவதற்கு மற்றும் வெளிநாட்டு தூதரகங்களின் பிரிவுகளினால் வெளியிடப்படும் விமான பயணச் சீட்டுக்களில் வருமானங்களை தனியாக இனங்காணுவதற்கு முடியாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டினுள் 409,464 விண்ணப்பங்கள் தீணைக்களத்திற்கு கிடைத்துள்ளதுடன் அவற்றுள் 382,532 விண்ணப்பங்கள் அல்லது 93 சதவீதமானவை 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | செயலாற்றலை உச்ச அளவில் பேண வேண்டும். |
| (இ) | வெளிநாட்டுத் தூதரங்களின் ஊடாக பெற்றுக் கொள்ளப்படும் விமானக் கடவுச்சீட்டுக்களுக்காக அதன் நிர்வாக செலவினமாக 100 டொலர் விண்ணப்பதாரர் களிடமிருந்து அறவிடப்பட்ட போதிலும் விண்ணப்பங்களுடன் உரிய ஆவணங்களை சரியாகவும் முழுமையாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக சேவை பெறுநருக்கு செயற்திறனான சேவைகளை வழங்குவதற்கு முடியாதிருந்தமையால் குறித்த சேவைகளுக்காக பணத்தை செலுத்தி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் விமானக் கடவுச்சீட்டுக்களை பெற்றுக் | பதில் வழங்கப்படவில்லை. | வெளிநாட்டு தூதரங்களின் ஊடாக விமான கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளும் நடைமுறை செயற்திறனாக்கப் படல். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற:கு விண்ணப்பதாரர்களுக்கு நீண்டகாலம் கடந்திருந்தது. | | |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு தூதரகங்களின் கிளைகளுக்கு 64,280 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் 61,833 விமானக் கடவுச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு பல்வெறு குறைபாடுகள் காரணமாக 2021 ஆம் ஆண்டின் போது 667 விமானக் கடவுச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | - மேற்படி - | வெளிநாட்டு தூதரங்களின் ஊடாக விமான கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளும் நடைமுறை செயற்திறனாக்கப் படல். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக குடிவரவு மற்றும் குடியகல்வு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1292 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி 1016 ஆனமையால் வெற்றிடம் மற்றும் மிகைப் பதவியணி முறையே 278 மற்றும் 02 ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | மனிதவள முகாமைத்துவம் முறைமைப் படுத்தப்படல். |
| (ஆ) | திணைக்களத்தின் பிரதான பதவியொன்றான குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் (புலனாய்வு மற்றும் செயற்பாடு) பதவி பல வருடங்களாக வெற்றிடமாக காணப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டின் போதும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | மனிதவள முகாமைத்துவம் முறைமைப் படுத்தப்படல். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை 20 ஆன போதிலும் 2020 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையிலும் இரு மிகை உத்தியோகத்தர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | ஒரு உத்தியோகத்தர் சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ளதுடன் மற்றொரு உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுள்ளமையால் விடுவிக்க நிமித்தமாக உள்ளார். | - மேற்படி - |